**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, SINGAMPUNARI**

**CC. No.84/2020 PW .1**

| | |
|---|---|
| பெயர் :சீதா | தந்தை/கணவர் பெயர்: ஜெயராஜ் |
| ஊர் : | தாலுகா : |
| வயது : | தொழில் : |
| ஜாதி : | சமயம் : இந்து |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 18.05.2026

**(1, 3 எதிரி இறப்பு. 2 வது எதிரி ஆஜர்)**

**<u>18.05.2026 முதல் விசாரணை:</u>**

1. நான் தற்போது செல்லியம்பட்டியில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். அசா.1 எனது கணவர் ஆவார். எதிரி ஆண்டாத்தாள் எனது கணவரின் அக்கா அவர் இறந்து போய்விட்டார் ஆஜர் எதிரி வீரைய்யா ஆண்டாத்தாளின் கணவர் ஆவார்.சுமார் 5, 6 வருடங்களுக்கு முன்பு ஒருநாள் காலை எங்கள் வீட்டின் அருகே கூட்டமாக இருந்தது. நாங்கள் என்னவென்று பார்க்க சென்ற போது கூட்டத்தில் ஏற்பட்ட தள்ளுமுள்ளில் நான் கீழே விழுந்து விட்டேன். எனக்கு ஊமைக்காயம் ஏற்பட்டது. என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொழுத்து மட்டும் என்னுடையது ஆகும். **(மேற்படி புகார் மனு கையொழுத்து மட்டும் அதசா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**<u>அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக மாற்ற அனுமதி கோரி அனுமதிக்கப்படுகிறது.</u>**

**<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

2. நான் எதிரியுடன் சமரசம் ஆகி நீதிமன்றத்தில் சமரச மனு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். (**அந்த சமரச மனு அ.த.சா.ஆ–2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது**). கடந்த 12.02.2020 ம் தேதி சுமார் 19.30 மணிக்கு நான் வீட்டில் இருந்த போது அங்கு வந்த 1 வது எதிரி ஆண்டாத்தாள் குடும்ப பிரச்சனையை மனதில் வைத்துக் கொண்டு என்னையும் எனது கணவரையும் தேவிடியா முண்டை என்று அசிங்கமாக பேசி கன்னத்தில் அறைந்து கீழே தள்ளினார் என்றும் அப்போது 2 வது

வீரைய்யாவும் இளஞ்சிறார் அருண்குமார் என்ற அருண்பாண்டியன் என்பவரும என்னை பெண் என்றும் பாராமல் சேலையை பிடித்து இழுத்து, கையால் அடித்தும் என்னை பார்த்து மூவரும் கடப்பாறை மற்றும் கம்பியை காட்டி கொல்லாமல் விடாட்டோம் என கொலை மிரட்டல் விடுத்தார்கள் என்று போலீசார் விசாரணையில் சொல்லி விட்டு இன்று எதிரிகள் உறவினர்கள் என்பதாலும அவர்களுடன் நான் சமரசம் செய்து சமரச மனு தாக்கல் செய்த காரணத்தினாலும் எதிரிகளுக்கு பயந்து உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:</u>** இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி அரசு மற்றும் குற்றம்சாட்டப்பட்டவர்கள் தரப்பு வழக்குரைஞர்களுக்கு முன்பாக சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
சிங்கம்புணரி